**TRACK - 2**

*S.டேனியல் சம்பத் குமார்*
*எண் 147, திருநிலை காலனி ,*
*விச்சூர் போஸ்ட் ,*
*சென்னை – 600 103*




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**
*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

# தூதன்

## The Messenger

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”**

# ‘‘கர்த்தர் உரைக்கிறதாவது’’

## ‘‘ஏழாம் தூதனின் சத்தம்’’

## ‘‘இக்காலத்துக்கு ஒரே தீர்க்கதரிசி – தூதன்’’

## ‘‘பிழையற்றத் தன்மையின் ஊழியம்’’

## ‘‘தலைக்கல் தீர்க்கதரிசன ஊழியம்’’

## ‘‘வெளிப்படுத்தல் 10:6ன் தீர்க்கதரிசி – தூதன்’’

## ‘‘மல்கியா 4:5–6ல் உரைக்கப்பட்டவர் அவரே’’

## ‘‘தேவனால் உறுதிப்படுத்தப்பட்டவர்’’

## ‘‘ஆவியினால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டவர்’’

## ‘‘அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி’’

# லவோதிக்கேயா சபையின்

# தூதன்

### வெளி. 3:14-22

லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்; உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது;

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;

நான், நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்றும் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு.

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்திலே என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றெழுது என்றார்.

பரிசேயர்கள், இயேசுவும் யோவானும் போதித்தவை தவறென்று அக்காலத்தில் கூறினர்.

இப்பொழுது ஏன் இந்த கள்ள தீர்க்கதரிசிகள் உண்மையான தீர்க்கதரிசிக்கு எதிராக வந்து அவனுடைய போதகத்திற்கு அவப் பெயரை கொண்டு வருகின்றனர்? ஏனெனில் அவர்கள் பிதாக்கள் ஆகாபின் நாட்களில் மிகாயாவை எதிர்த்ததுபோல இவர்கள் சரியாக செய்கின்றனர். அவர்கள் நானூறு பேராக இருந்து, **எல்லோரும் ஒரே இசைவாக இருந்தனர்; அவர்கள் எல்லோரும் ஒரே காரியத்தைக் கூறினர், அவர்கள் மக்களை முட்டாளாக்கினர்.** ஆனால் **ஒரேயொரு** தீர்க்கதரிசி - **ஒருவன் மாத்திரமே** - சரியாக இருந்தான், மற்ற எல்லோரும் தவருக இருந்தனர். ஏனெனில் தேவன் அந்த வெளிப்பாட்டை **ஒரேயொரு** நபருக்கு மாத்திரம் அளித்திருந்தார்.

கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

இதைப்பற்றி உங்களுக்கு இனியும் சந்தேகம் உண்டாயிருக்குமாயின், தேவன்; தம்முடைய ஆவியினாலே உங்களை நிரப்பி, வழிநடத்த அவரிடம் மன்றாடுங்கள். **தெரிந்து கொள்ளப்பட்ட எவரும் ஏமாந்து போவதில்லை.** உங்களுக்குப் புரிகின்றதா? ஒரு மனிதனும் அவர்களை வஞ்சிக்க முடியாது. பவுல் ஒருகால் தவருகப் பிரசங்கித்திருந்தால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்; அந்தத் தவறை உடனே உணர்ந்திருப்பார்கள். முதலாம் சபையாகிய எபேசு சபையின் காலத்தில் உண்டாயிருந்த தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், கள்ள அப்போஸ்தலர்களையும், கள்ள தீர்க்கதரிசிகளையும் சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்து, அவர்களை சபையினின்று புறம்பாக்கினர்; அல்லேலூயா! **அவருடைய** ஆடுகள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து **அவரைப்** பின் செல்கின்றனர். ஆமென், நான் அதை முற்றிலும் நம்புகிறேன்.

வார்த்தையை அசட்டை செய்து அது தேவனுலானது என்பர். ஜனங்களும் அவர்களிடம் சென்று, அவர்களுடன் உழைத்து, அவர்களை ஆதரித்து, அது மரணத்திற்கு போகும் வழி என்பதை உணராமல் அவர்களை விசுவாசிப்பர். ஆம், பூலோகம் முழுவதும் இத்தகைய போலி அற்புதங்களைச் செய்பவர்களால் நிறைந்திருக் கிறது. இந்த கடைசி நாளில் அவர்கள் அந்த தீர்க்கதரிசி - செய்தி யாளனை அவர்கள் பாவனை செய்ய முயற்சிப்பர். ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும் இவ்விதமாகப் பவுலின் செயல்களையே செய்ய முயற்சித்தனர். மந்திரவாதியாகிய சீமோன், பேதுரு நடப்பித்த கிரியைகளைத் தானும் செய்ய எண்ணினுன். இவர்களின் பாவனை அனைத்தும் மாம்சத்துக்குரியது. உண்மையான தீர்க்கதரிசி செய் பவைகளை இவர்கள் செய்ய முடியாது. அந்தத் தீர்க்கதரிசி எழுப்புதலின் காலம் கழிந்தது என்று கூறிய பிறகும், மக்க ளிடையே தேவன் இன்னும் வல்லமையான கிரியைகளைச் செய்து, பெரிய எழுப்புதலை உண்டுபண்ணுவாரென்று இவர்கள் தவருகப் போதித்து வருகின்றனர். மக்களும் இவர்களுடைய சொற்கேட்டு விசுவாசத்தைவிட்டு வழுவிப் போவர். கடைசி காலத்துத் தூதன் வேதசாஸ்திரம் படித்தவரல்லவென்றும், அதனுல் மக்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்கக் கூடாது என்றும் இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகள் போதிப்பார்கள் - கூறுவார்கள். ஆனுல், அந்த செய்தியாளன் நடப்பிப்பவைகளை அவர்களால் செய்ய முடியாது; கடைசி நாளின் தீர்க்கதரிசி உறுதிப்படுத்தப் படுவது போல தேவனுல் அவர்கள் உறுதிப்படுத்தப்பட மாட்டார்கள். ஆனுல் அவர்களுடைய மகத்தான சொற்பொழிவு களாலும், உலக முழுவதும் அவர்கள் கொண்டிருக்கின்ற கொடிய பலத்தாலும் ஜனங்கள் அந்த மனிதனுக்கு (செய்தியாளனுக்கு) செவி சாய்க்க கூடாதென்றும், அவர் போதிப்பது தவறு என்றும் மக்களை எச்சரிப்பார்கள். இவர்கள், தங்கள் முற்பிதாக்களாகிய பரிசேயரைப் போன்று பிசாசினுல் உண்டானவர்கள்,

# தூதன்
## (The Messenger)

பவுல் செய்தியாளனுக இருந்த முதலாம் சபை காலத்தை தவிர, வேறெந்த சபையும், தேவன் அதற்கு அனுப்பின செய்தியாளனை அறிந்து கொண்டிருந்ததாவென்று நான் சந்தே கிக்கின்றேன். பவுலின் காலத்திலும் கூட, அநேகர் அவன் யார் என்பதை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலமானது மிகவும் குறுகின ஒரு காலமாக இருக்கப் போகிறது. சம்பவங்கள் அனைத்தும், ஒன்றன்பின் ஒன்ருக வேகமாக நிகழ்ந்தேறப் போகின்றது. ஆதலால் இந்த லவோதிக்கேயா காலத்தின் செய்தியாளன், ஒருகால் நாம் அவரை அறிந்திருக்க வில்லை என்ருலும், அவர் இப்பொழுது இங்கே இருந்தாக வேண்டும். ஆனுல் அவர் அறிந்து கொள்ளப்பட வேண்டிய சமய மானது நிச்சயமாக இருந்தாக வேண்டும். இப்பொழுது அதை என்னுல் நிரூபிக்க முடியும். ஏனெனில் அவருடைய ஊழியத்தை விவரிக்கும் வேதவசனம் நமக்கு உள்ளது.

முதலாவதாக அந்த செய்தியாளன் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கப் போகின்ருர். ஒரு தீர்க்கதரிசியின் உத்தியோகத்தை (Office) அவர் கொண்டிருப்பார். அவர் தீர்க்கதரிசன ஊழியத்தை கொண்டிருப்பார். அது உறுதியாக வார்த்தையின் மேல் அஸ்தி பாரப்படுத்தப்பட்டிருக்கும். ஏனெனில் அவர் ஒரு தீர்க்கதரிசனம் உரைத்தாலோ அல்லது ஒரு தரிசனத்தைக் கண்டாலோ, அது எப் பொழுதுமே ''வார்த்தையையே முதலாகக் கொண்டு'' இருந்து அது **எப்பொழுமே** நிறைவேறும். அவருடைய பிழையின்மையான, மிகவும் சரியாக இருத்தலால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்று உறுதிப் படுத்தப்படுவார். அவர் ஒரு தீர்க்கதரிசி என்கின்ற நிருபண மானது வெளி.10:6ல் காணப்படுகின்றது, ''தேவன் தம்முடைய

ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்த படி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப் போகிறபோது தேவ ரகசியம் நிறைவேறும்.'' இப்பொழுது, ஜேம்ஸ் அரசனின் ஆங்கில மொழி பெயர்ப்பின்படி இங்கு தூதன்' என்று இந்த வசனத்தில் அழைக்கப்படுகின்ற இந்த நபர் ஒரு பரலோகவாசி **அல்ல**. எக்காளம் ஊதுகின்ற, பரலோக வாசியான தூதன் வெளி.*9:13*ல் கூறப்படுகிறுன். அதே வரிசையில் ஏழாவதானவன் வெளி.*11:15*ல் இருக்கின்றுன். வெளி.*10:6*ல் இருக்கின்ற இவர் ஏழாம் காலத்தின் செய்தியாளன், இவர் ஒரு மனிதன் ஆவார், இவர் தேவனிடத்திலிருந்து செய்தியை கொண்டு வருபவராவார், இவருடைய செய்தியும் ஊழியமும், தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்கு அறிவித்தபடி தேவ ரகசியத்தை நிறைவேற்றும். இந்த கடைசி செய்தியாளனை ஒரு தீர்க்கதரிசியாக தேவன் கருதுகிறுர். **ஏனெனில் இவர் ஒரு தீர்க்கதரிசியே.** முதலாம் சபை காலத்தில் அவ்வாருகத் தான் பவுல் இருந்தான், ஆகவே இந்த கடைசி காலமும் ஒருவரைக் கொண்டிருக்கும். ஆமோஸ்.*3:6-7*. ''*ஊரில் எக்காளம் ஊதினுல், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ? கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.*''

இந்த கடைசி - கால சமயத்தில் தான் இயேசுவின் ஏழு இடிகள் வெளி வந்தன. வெளி.*10:3-4* ''*சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான். அவன் ஆர்ப்பரித்தபோது, ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின. அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது ஏழு இடி முழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்*'' அந்த இடிகளில் என்ன இருந்ததோ,



சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினுலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள்'' இப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் கவனிப்பீர்களென்றுல் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியானவன் வார்த்தையை விட்டு வெளியே இருப்பவன் ஆவான். 'அந்திக் கிறிஸ்து' என்னும் வாக்கு வார்த்தைக்கு விரோதமாயுள்ளவன்' என்று பொருள்படும் என்பதை நான் முன்னமே கூறியுள்ளேன். ஆகையால், கள்ளத் தீர்க்கதரிகிகளென்னப்படுபவர் வார்த்தையைத் தாறுமாறுக்கி, தங்களுடைய பொல்லாங்கான வழிகளுக்கேற்ப அதற்கு அர்த்தத்தை உண்டாக்கிக் கொள்வர். மக்களை வார்த்தையை விட்டு அகலச் செய்பவர்கள். இம்மக்களை பயமுறுத்தி, தங்களோடு ஒன்றுக சேர்த்து வைத்திருப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் கூறுவதை மக்கள் பின்பற்றுமல் விட்டு விட்டால், அழிவு சம்பவிக்கும் என்று அவர்கள் பயமுறுத்துகின்றனர். இவர்களெல்லாம் கள்ளத் தீர்க்கதரிசிகளாயிருக்கின்றனர். ஒரு உண்மையான தீர்க்கதரிசியோ, எப்பொழுதுமே ஒருவனை வார்த்தைக்கு நடத்தி, அவர்களை இயேசுகிறிஸ்துவோடு ஒன்று சேர்ப்பான். மக்கள் அவனைக் கண்டு பயப்பட வேண்டுமென்று அவன் ஒருகாலும் கூறுவதில்லை; வார்த்தை கூறுவதை மாத்திரம் அவர்கள் பயத்தோடு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர்களுக்குப் போதிப்பான். இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள் யூதாஸைப் போன்று பண ஆசை பிடித்தவராயிருக்கின்றனர் என்பதை கவனியுங்கள். உங்களுக்குள்ள எல்லாவற்றையும் விற்கச் செய்து, அதனுல் வரும் பணத்தைக் கொண்டு, தங்கள் திட்டங்களை நிறைவேற்ற உபயோகிப்பார்கள்;. அவர்கள் தங்கள் நேரத்தை வார்த்தைக்கு காட்டிலும் அதிகமாக காணிக்கைகளுக்கு செலவழிப்பர். வரத்தை பிரயோகிக்க விரும்புவர்கள் சிறிது பிழையுள்ள ஒரு வரத்தை உபயோகித்து பிறகு பணத்தை கேட்பர்,

இப்பொழுது, வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப் பட்டுள்ள அந்த மனிதன், ஒரு **உண்மையான கள்ள தீர்க்கதரிசியாக** இருக்கப் போகிறுன். ஆனுல் அவனுடைய வெளிப்பாட்டிற்கு முன்னர் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றுவர். *(மத்தேயு 24:23-26)* ''அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறுர், அதோ, அங்கே இருக்கிறுர் என்று எவனுகிலும் சொன்னுல் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானுல் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ முன்னதாக நான் உங்க ளுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால், அதோ, வனுந்தரத்தில் இருக்கிறுர் என்று சொல்வார்களானுல் புறப்படாதிருங்கள்; இதோ அறை வீட்டிற்குள் இருக்கிறுர் என்று சொல்வார்களானுல் நம்பா திருங்கள்'' இந்த கள்ளத் தீர்க்கதரிசிகள் வேறு வேத வசனங் களிலும் நமக்காக குறிப்பிடப்பட்டுள்ளனர். *2 பேதுரு.2:1-2.* ''கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்'' *(2 தீமோ.4:3-4)* ''ஏனென்றுல், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவி விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங் காலம் வரும்.'' *(1 தீமோ.4:1).* ''ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்



அது யாருக்கும் தெரியாது. ஆனுல் அது நமக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அந்த வெளிப்பாட்டை ஒரு தீர்க்கதரிசி தான் கொண்டு வரவேண்டும். ஏனெனில் தேவன் தம்முடைய வேதப் பிரகாரமான வெளிப்பாடுகளை ஒரு தீர்க்கதரிசியின் மூலமாக கொண்டு வருவதைத் தவிர அவருக்கு வேறே எந்த ஒரு வழியும் கிடையாது. வார்த்தையானது எப்பொழுதுமே ஒரு தீர்க்க தரிசியினுல் வந்தது, எப்பொழுதுமே அவ்விதமாகத் தான் வரும். வேத வசனத்தை மேலோட்டமாக ஆராய்ந்தாலே தேவனுடைய பிரமாணம் இதுவேதான் என்பது தெள்ளத் தெளிவாக தெரியும். தம்முடைய வழிகளில் மாருதிருக்கின்ற அந்த மாருத தேவன், ஒவ்வொரு காலத்திலும் ஜனங்கள் தெய்வீக ஒழுங்கை விட்டு வழி விலகும்போது, வழக்கமாக தம்முடைய தீர்க்கதரிசியை அனுப்பினுர். வேத பண்டிதர்களும், ஜனங்களுமாகிய இருவரும் வார்த்தையை விட்டு கடந்து அப்பாற் சென்றிருக்கையில், தவருன போதகத்தைத் திருத்தி இந்த ஜனங்களை தேவனிடத்திற்குத் திருப்பி வழிநடத்த, தேவன் எப்பொழுதும் தம்முடைய ஊழியக் காரனை (ஆனுல் வேத பண்டிதருக்கு அப்பாற்பட்டுதான்) இவர் களிடம் அனுப்புகிறுர்.

ஆதலால் ஏழாவது சபை காலத்தின் செய்தியாளன் வருவதை நாம் காண்கிறேம், அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார்.

இங்கே வெளி.10:6ல் இங்கே வருகின்ற இந்த செய்தியாளனை மாத்திரமே நாம் காண்பதில்லை, ஆனுல் இயேசு திரும்ப வருவதற்கு முன்னர் எலியா வருவதைக் குறித்து வேதாகமம் கூறு கிறதையும் நாம் காண முடிகின்றது. மத்.17:10ல் ''அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி; அப்படியானுல் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறுர்களே, அதெப்படியென்று கேட்டார்கள். இயேசு, ''எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்'' என்று கூறினுர். நம்முடைய கர்த்தர் வருகைக்கு முன், சபையில் திரும்ப

அளிக்கப்படுதலின் வேலைக்காக எலியா மறுபடியும் வந்தாக வேண்டும். அதைத்தான் மல்.4:5 கூறுகிறது. ''இதோ, கர்த் தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளை களுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்பு வான்'' இயேசுவின் வருகைக்கு முன்னர் எலியா திரும்பவும் வந்தாக வேண்டும் என்பதில் துளிகூட சந்தேகம் கிடையாது. அவன் நிறைவேற்றி முடிக்க வேண்டிய பிரத்தியேகமான வேலை அவனுக்கு இருக்கின்றது. அந்த வேலையைதான் மல்.4:6ன் ஒரு பாகம் கூறுகின்றது. ''அவன் பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்குத் திருப்புவான்''. அந்த சமயத்தில் அவன் செய்யவேண்டிய அவனுடைய பிரத்தியேகமான வேலை இதுதான் என்பதை நாம் அறிந்து கொண்டிருக்கின்ற காரணம் என்னவெனில், ஏனென்றால், இங்கே யோவான் ஸ்நானனிற்குள் எலியாவின் ஊழியம் இருந்து ''அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்தில் திருப்புவான்'' என்று கூறுகின்ற அந்த பாகத்தை அவன் ஏற்கனவே செய்து முடித்திருந்தான். லூக்கா 1:17. ''பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத் திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்'' யோவானின் ஊழியத்தில் ''பிதாக்களுடைய இருதயங்கள் பிள்ளைகளிடத்திற்கு திருப்பப்பட் டிருந்தது.'' அதை நாம் அறிந்திருக்கின்றோம். ஏனெனில் இயேசு அவ்வாறு கூறியிருக்கின்றார். ஆனால் அது பிள்ளைகளுடைய இருதயங்கள் பிதாக்களிடத்திற்கு திருப்பப்பட்டிருக்கிறது என்று அது கூறவில்லை. அது இன்னமும் சம்பவிக்கவில்லை. கடைசி நாளின் பிள்ளைகளின் இருதயங்கள் பெந்தெகொஸ்தே பிதாக்



உபதேசத்திற்கு ஒரு சிறிய குறிப்பில் கூட அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருப்பர். அப்படியானால் இந்தக் கடைசி காலத்தில் மாசில்லாத வார்த்தை மணவாட்டியை வெளிப்படுத்தப் போகின்றதானால், இந்த கடைசி காலத்தில் திரும்ப அளிக்கப்பட விருக்கின்ற பிழையற்ற வல்லமையை யார் கொண்டிருப்பார்? அப்படியென்றால் பவுலின் காலத்தில் பரிபூரணமாக அளிக் கப்பட்டு பரிபூரணமாக புரிந்துகொள்ளப்பட்ட வார்த்தையை மறுபடியுமாக நாம் கொண்டிருப்போம். அதை யார் கொண் டிருப்பார் என்று நான் கூறுகிறேன். அது முழுவதுமாக உறுதி படுத்தப்பட்ட, அல்லது ஏனோக்கு முதல் இந்த நாள் வரையிலும் எந்த தீர்க்கதரிசியும் உறுதிப்படுத்தப்படாத விதத்தில் இன்னும் அதிகமாக முழுவதுமாக உறுதிப்படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி யாக இருக்கும், ஏனெனில் இந்த மனிதன் தேவன் அவருக்கு காண்பித்த அளிக்கின்ற தலைக்கல் தீர்க்கதரிசன ஊழியத்தைக் கொண்டிருப்பார். அவர் (செய்தியாளன்- தமிழாக்கியோன்) தனக்குத் தானே பேச வேண்டிய அவசியம் இல்லை, சத்தத்தின் அடையாளத்தைக் கொண்டு தேவன் அவருக்காக பேசுவார். ஆமென்.

நம்முடைய இருதயத்தில் பதிக்கப்பட வேண்டிய இரண் டாவது கருத்தானது, ஏழு சபையின் காலங்கள், அந்திக்கிறிஸ்து வின் ஆவியைக் கொண்டும், என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப் படத்தக்கவரான பரிசுத்த ஆவியானவரைக் கொண்டும் ஆரம்பித் தது. 1 யோவான் 4:1. ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவை களோ என்று சோதித்தறியுங்கள்'' அதை நீங்கள் கவனித்தீர்களா? அந்திக்கிறிஸ்துவின் ஆவி கள்ள தீர்க்கதரிசிகளோடு அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. காலங்கள் கள்ள தீர்க்கதரிசிகளோடு வருகிறது. அவைகள் கள்ள தீர்க்கதரிசிகளோடு முடிவுறுகிறது.

மோசேயை அளித்தார். (மற்றவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்த போதிலும் அவன் மாத்திரமே வார்த்தையைக் கொண்டிருந்தான்); யோவான் ஸ்நானன் **தனியாக** வந்தான். இப்பொழுது இந்த கடைசி நாளில் ஒரு **தீர்க்கதரிசி** இருப்பான். (ஒரு தீர்க்கதரிசினி அல்ல - ஏனெனில் இந்த காலத்தில் மனிதனைவிட அதிகமான ஸ்திரீகள் தேவனுடைய வெளிப்பாட்டை பெறுவதாகக் கூறிக் கொள்கின்றனர்.) ஆகவே **அவர்** (அந்த தீர்க்கதரிசி) கடைசி கால ஜனங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்தி பிள்ளைகளுடைய இருதயங்களை திருப்புவாரென்று பிழையற்ற வேத வசனம் தெளிவாய் நமக்குப் போதிக்கிறது. அநேகருக்குக் கிடைக்கப் பெறும் வெளிப்பாட்டின் மூலம் (Collective Revelation), தேவனுடைய மக்கள் ஒன்றுபடுவர் என்று கூறும் சிலர் உண்டு. அவ்விதமாக கூறப்படும் கூற்றை நான் சவாலிடுகிறேன். வெளி.10:6ன் படி பார்த்தால் அது ஒரு வெறுமையான,செல்லாத, மதிப்பில்லாத ஒரு யூகமாகும். கடைசி காலத்தில் மக்கள் தீர்க்க தரிசனம் உரைத்து, சரியான ஊழியத்தைச் செய்வர் என்பதை நான் மறுக்கிறேன் என்று நீங்கள் எண்ணவேண்டாம். பவுலின் காலத்திலும், ''அகபு என்னும் தீர்க்கதரிசி வரப்போகும் பஞ்சத் தைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்ததாக'' வேதம் கூறுகிறது. அது அவ்விதம் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். **ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட 'தீர்க்கதரிசி - செய்தியாளன் ' தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கின்ற இரகசியங்களை வெளிப்படுத்தி, பிள்ளைகளுடைய இருதயங்களை பிதாக்களிடத்திற்கு திருப்பும் ஊழியத்தைக் கொண டிருப்பார்கள் என்பதைப் பிழையற்ற வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டு நான் மறுக்கிறேன்.** ''கர்த்தர் உரைக்கிறதாவது'' அவரு டைய தவறாத வார்த்தை நிற்கின்றது. அது நின்று உறுதி படுத்தப்படும். இந்த காலத்திற்கு ஒரு தீர்க்கதரிசி -செய்தியாளன் மாத்திரமே உண்டு. மனித இயல்பின்படி எங்கே அநேக மக்கள் இருக்கின்றனரோ அங்கே அவர்கள் கொண்டிருக்கின்ற பெரிய



களிடத்திற்கு திருப்பப்படும். பிள்ளைகளை மந்தைக்குள் இயேசு வரவேற்க பிதாக்களை யோவான் ஆயத்தம் செய்து வைத்திருந்தான். இப்பொழுது இந்த எலியாவின் ஆவியை தன் மேல் கொண்டிருக் கின்ற இந்த தீர்க்கதரிசி, இயேசு திரும்ப வரவேற்க பிள்ளைகளை ஆயத்தம் பண்ணுவான்.

இயேசு யோவான் ஸ்நானனை எலியாவென்று அழைத்தார். மத்.7:12. ''ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக் குச் செய்தார்கள்'' யோவானை எலியா என்று அவர் அழைத்த காரணம் என்னவென்னில், எலியாவின் மேலிருந்த அதே ஆவி யோவானின் மேல் மறுபடியுமாக வந்தது, ஆகாப் அரசனின் அரசாட்சிக்கு பிறகு எலிசாவின் மேல் அந்த ஆவி திரும்ப வந்ததே அது போன்று. இப்பொழுது இயேசு திரும்ப வருவதற்கு முன்னர், மறுபடியுமாக அதே ஆவி மற்றுமொரு மனிதனின் மீது வரும். அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார். அவர் தேவனால் இந்த விதமாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பார். இயேசு தாமே அவரை *(செய்தியாளனை - தமிழாக்கியோன்)* யோவானை உறுதி படுத்தியது போல, உறுதிபடுத்த இங்கே மாம்சத்தில் இருக்க முடி யாதிருக்கும் பட்சத்தில், அது பரிசுத்த ஆவியானவரால் செய் யப்படும். ஆதலால் இந்த தீர்க்கதரிசியின் ஊழியம் மகத்தான, அற்புதமான உறுதிபடுத்துதல்களால் நிறைந்திருக்கும். ஒரு தீர்க்க தரிசியாக, ஒவ்வொரு வெளிப்பாடும் உறுதிப்படுத்தப்படும். ஏனெனில் ஒவ்வொரு வெளிப்பாடும் நிறைவேறித் தீரும். அவரு டைய விசுவாசத்தின் கட்டளைகளால் அற்புதமான வல்லமையின் கிரியைகள் நடைபெறும். பிறகு வார்த்தையின்படி தேவன் அவருக்கு அளித்திருந்த செய்தியானது, ஜனங்களை சத்தியத்திற்கும், தேவனுடைய உண்மையான வல்லமைக்கும் திரும்ப கொண்டு வரப்படும். சிலர் கேட்பார்கள், ஆனால் பெரும்பாலோர் சபையின் கோட்பாடுகளுக்கு உண்மையாய் வாழ்ந்து அவரைப் புறக்கணிப் பார்கள்.

வெளி. 10:6ல் கூறப்பட்டுள்ள இந்த தீர்க்கதரிசி - செய்தியாளன், மல்கியா 4:5-6ல் இருக்கின்ற விதமாக இருப்பார், அவர் இயல்பாகவே எலியா, யோவானைப் போலவே இருப்பார். இருவரும், அவர்கள் நாளில் இருந்த அங்கிகரிக்கப்பட்ட வேத பள்ளிகளுக்கு அப்பாற்பட்ட மனிதராக இருந்தனர். இருவரும் வனாந்திரத்தின் மனிதராக இருந்தனர். வெளிப்பாட்டின் மூலமாக தேவனிடமிருந்து நேரடியாக ''கர்த்தர் உரைக்கிறதாவது'' என்று பெற்று கொண்டபோது மாத்திரமே அவர்கள் காரியங்களை செய்தனர். இருவரும் அவர்களுடைய நாளிலிருந்த மத ஆசாரங் களையும், மதத் தலைவர்களையும் கடிந்துரைத்தனர். ஆனால் அது மாத்திரமல்ல, சீர்கெட்டுப் போனவர்களையும், மற்றவர்களை சீர் கேட்டுக்குள் கொண்டு சென்றவர்களையும்கூட அவர்கள் கடிந்துரைத்தனர். ஆகவே கவனியுங்கள், இருவரும் நல் லொழுக்கமில்லாத ஸ்திரீகளுக்கும், அவர்களுடைய வழிகளுக்கு எதிராகவும் அவர்கள் அதிகமாக தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

எலியா யேசபேலுக்கு எதிராகப் பிரசங்கித்தான். யோவான் பிலிப்புவின் மனைவியாகிய ஏரோதியாளைக் கடிந்துக்கொண் டான்.

இக்காலத்துத் தூதன் புகழ் பெற்றிராவிராவிட்டாலும் அவர் தேவனால் உறுதிப்படுத்தபடுவார். இயேசு யோவானை உறுதிப் படுத்தியது போன்று, பரிசுத்த ஆவி இயேசுவை உறுதிப்படுத்தி யது போல, முதலாவதாக இந்த மனிதன் வேறெங்குமே இல்லாத, மறுக்கப்பட முடியாத வல்லமையின் கிரியைகளால், தன்னுடைய ஜீவியத்தில் கிரியை செய்கின்ற ஆவியால் உறுதிப்படுத்தப் படுவான்; இயேசுவானவர் தாமே, வருகையில் அவரை உறுதிப்படுத்துவார், **அவர்** யோவானை உறுதிப்படுத்தியதைப் போலவே. இயேசு வருகின்றார் என்று யோவான் சாட்சி கொடுத்தான் - ஆகவே இந்த மனிதனும்கூட யோவானைப் போலவே, இயேசு வருகின்றார் என்று சாட்சி கொடுப்பார்.



அல்ல என்றும் அறிக்கையிட்டான்'' இப்பொழுது, இந்த கடைசி நாளின் தீர்க்கதரிசி - செய்தியாளனும் கர்த்தருக்கு முன்பாக மகத்தான வல்லமையை கொண்டிருப்பார். ஆதலால் அவரை (செய்தியாளனை - தமிழாக்கியோன்) கர்த்தராகிய இயேசு என்று சிலர் தவறாக எண்ணுவார்கள். (காலத்தின் முடிவில், அவர்கள் இதை நம்பத்தக்கதாக, பூமியில் ஒரு ஆவி இருந்து அவர்களை வஞ்சிக்கும்.) மத்.24:23-26. ''இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால், அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்''). ஆனால் நீங்கள் அதை நம்பாதீர்கள். அவர் (செய்தியாளன்- தமிழாக்கி யோன்) இயேசு கிறிஸ்து அல்ல. அவர் தேவனுடைய குமாரன் அல்ல. **அவர் சகோதரர்களில் ஒருவர், ஒரு தீர்க்கதரிசி, ஒரு செய்தி யாளன், ஒரு தேவனுடைய ஊழியக்காரன்.** அவருக்கு மகத்தான கனம் செலுத்தப்பட தேவையிராது. யோவானும் கீர்த்தி எதுவும் தனக்கென்று தேடிக்கொள்ளாமல், ''**நான் அவரல்ல, எனக்குப் பின் ஒருவர் வருகிறார்**'' என்று அறிக்கையிட்டான்.

லவோதிக்கேயா சபையின் செய்தியாளனைக் குறித்துள்ள செய்தியை நாம் இந்த இரு காரியங்களை நாம் கூர்ந்து சிந்திக்கக் கடவோம். முதலாவதாக, இந்த காலம் ஒரேயொரு தீர்க்கதரிசி- செய்தியாளனை கொண்டிருக்கும். வெளி.10:7 கூறுகிறது, ''அவன் (ஒருமை) எக்காளம் ஊதப் போகிறபோது.'' ஒரே நேரத்தில் இரண்டு பெரிய தீர்க்கதரிசிகளை தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அளித்த காலம் இருந்ததே கிடையாது. அவர் ஏனோக்கை (தனியாக அளித்தார்; அவர் நோவாவை (தனியாக) அளித்தார்; அவர்

இப்பொழுது மல்கியா 4ம் அதிகாரத்திலும் வெளி.10:6லும் உரைக்கப்பட்ட இந்த செய்தியாளன் இரண்டு காரியங்களைச் செய்வார். முதலாவதாக, மல்கியா 4 உரைத்தபடி, அவர் பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்குத் திருப்புவார். இரண்டாவதாக வெளி.10ல் உள்ள, ஏழு முத்திரைகளில் இருக்கின்ற அந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்களை அவர் *(செய்தியாளன் - தமிழாக்கியோன்)* வெளிப்படுத்துவார். இந்த தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட இந்த 'இரகசிய-சத்தியங்கள்' தான் பிள்ளைகளுடைய இருதயங்களை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பும். முற்றிலுமாக சரி.

இதை நாம் பார்ப்போம். இந்த தீர்க்கதரிசி - செய்தியாளன், எலியா யோவான் போன்ற சுபாவத்தையும் தன்மைகளையும் கொண்டிருப்பார். இந்த தீர்க்கதரிசி - செய்தியாளரின் நாளில் உள்ள ஜனங்கள் ஆகாபின் நாளிலும், யோவானின் நாளிலும் இருந்த விதமாகவே இருப்பர். ஆகவே ''**பிள்ளைகளின் இருதயங்கள் மாத்திரமே**'' திருப்பப்படும். ஏனெனில் பிள்ளைகள் தாமே செவி கொடுப்பார்கள். ஆகாபின் நாட்களிலே 7000 உண்மையான வித்துக்கள், இஸ்ரவேலர்கள் மாத்திரமே காணப்பட்டனர். யோவானின் காலத்திலும் மிகவும் சொற்ப பேர் மாத்திரமே இருந்தனர். இந்த இரண்டு காலத்திலும் இருந்த பெரும் பான்மையான மக்கள் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருந்தனர்.

லவோதிக்கேயா கால தீர்க்கதரிசி - செய்தியாளனுக்கும், இயேசுவின் முதலாம் வருகைக்கு முன்னோடியான தீர்க்கதரிசி-செய்தியாளன் யோவானுக்கும் மற்றுமொரு ஒப்பீட்டை நான் செய்ய விரும்புகிறேன். யோவானின் நாளின் ஜனங்கள் அவனை மேசியா என்று தவறாக எண்ணினர். யோவான் 1:19-20. ''எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் வேலியரையும் யோவானிடத்தில் அனுப்பி, நீர் யார் என்று கேட்ட பொழுது, அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி நான் கிறிஸ்து



கிறிஸ்துவினுடைய வருகையே, **அவருடைய** இரண்டாம் வருகைக்கு முன்னோடி இந்த மனிதனே தான் என்று நிரூபண மாக்கும். மல்கியா 4ன் தீர்க்கதரிசி இவரே தான் என்பதின் கடைசி அத்தாட்சி இதுதானேயாகும். ஏனெனில் புறஜாதிகளின் காலத்தின் முடிவில், இயேசு தாமே தோன்றுகின்றார். பிறகு அவரை *(செய்தியாளனை - தமிழாக்கியோன்)* புறக்கணித்தவர்களுக்கு காலமானது கடந்துவிட்டிருக்கும்.

இந்த கடைசி நாளின் செய்தியாளனைக் குறித்த நம்முடைய தொகுப்பளிப்பை மேலும் தெளிவாக்க, மத்.11:12ல் குறிக்கப்பட்ட தீர்க்கதரிசி யோவான் ஸ்நானன், அவனைக் குறித்து மல்.3:1ல் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் குறிப்பாக கவனிப்போம். ''இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணு வான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' மத்.11:1-12. ''இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளை கொடுத்து முடித்த பின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார். அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து, வருகிறவர் நீர் தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர்

எழுந்திருக்கிறார்கள். தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார். அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக் குறித்துச் சொன்னது என்னவென்றால்; எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்தவர்கள் அரசர் மாளிகையில் இருக்கிறார்கள். அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதெப்படியெனில், இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான். ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும் பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.'' இது ஏற்கனவே நடந்தேறிவிட்டது. இது சம்பவித்து விட்டது. அது முடிவு பெற்றுவிட்டது. ஆனால் இப்பொழுது மல்கியா 4:1-6ல் ''இதோ சூளையைப் போல் எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய், கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள். துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள்



உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஓரேபிலே இஸ்ரவேலெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப் பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள். இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்'' பாருங்கள், **இந்த** எலியாவின் வருகைக்கு பிறகு உடனடியாக, பூமியானது நெருப்பினால் சுத்திகரிக்கப்பட்டு, பொல்லாதவர்கள் சாம்பலாய் எரிக்கப்பட்டு போவார்கள். ஆம், யோவானின் காலத்தின்போது (அவனுடைய நாளின் எலியா) இது **சம்பவிக்கவில்லை.** மல்கியா 3:1ல் உள்ள செய்தியாளனின் (யோவான்) வருகையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த தேவ ஆவியானவர் முன்னூறு வருடங்களுக்கு முன்னர் உரைக்கப்பட்டிருந்த அவருடைய முந்தைய ஏசாயா 40:3 தீர்க்கதரிசனத்தை திரும்ப வலியுறுத்துகிறார். ''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள்'' இப்பொழுது யோவான், பரிசுத்த ஆவியினால், ஏசாயா, மல்கியா இருவரையும் சேர்த்து மத்.3:3ல் உரைக்கிறான். ''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே'' மல்கியா 3ம் அதிகாரத்தில் குறிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானன், மல்கியா 4ம் அதிகாரத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசி அல்ல என்பதை நாம் வேதத்தின் மூலம் அறியலாம். **யோவானும், இந்த கடைசி - நாள் தீர்க்கதரிசியும் எலியாவின் மேல் இருந்த அதே ஆவியை தங்கள் மீது கொண்டிருப்பார்கள்.**